**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**
**மேட்டுர்.**
**OS.No**. 44/2025
**வழக்கு சாட்சி PW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோவிந்தசாமி | கணவர் பெயர் | : ---- |
| தகப்பனார் பெயர் | ஆறுமுகம் | வயது | : 57 |
| கிராமம் | சின்னக்காவூர் | நாள் | : 20.02.2026 |
| தாலுகா | மேட்டுர் | | |
| மாவட்டம் | சேலம் | | |

<u>முதல் விசாரணை :</u>

நான் இவ்வழக்கில் 1ம் வாதி ஆவேன். நான் இன்று தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவையாகும். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்கிறேன்.

1. எனது தகப்பனார் ஆறுமுகம் என்பவரின் வாரிசு சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.1** ஆகும்.
2. எனது சகோதரர் கார்த்தி என்பவரின் இறப்பு சான்றிதழ் கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ–2** ஆகும்.
3. எனது சகோதரர் கார்த்தி பெயரில் செலுத்தப்பட்ட சொத்து வரி ரசீது அசல் **வா.சா.ஆ.3** ஆகும்.
4. மேட்டுர் வட்டாட்சியர் அவர்கள் வழங்கிய குறிப்பாணை சார்வு நகல் **வா.சா.ஆ.4** ஆகும்.
5. என்னுடைய ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் **வா.சா.ஆ.5** ஆகும்.
6. எங்கள் குடும்ப வம்சாவளி பட்டியல் அசல் **வா.சா.ஆ.6** ஆகும்.

(குறுக்கு விசாரணைக்காக வழக்கு 05.03.2026 ம் தேதி ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.